படிவம் எண். CAA.2

[பிரிவு 230(3) மற்றும் விதி 6 மற்றும் 7-ன்படி]

தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம்,

சென்னை கிளை, சென்னை முன்னிலையில்

TCA/66/CAA/2017

(1956 நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவுகள் 391-ன்கீழ் 394 வரை/
2013 நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவுகள் 230-ன்கீழ் 232 வரை மற்றும்
2013 நிறுவனங்கள் சட்டத்தின் பிற பொருந்தக்கூடிய சரத்துகளின்கீழ்)

உசுயி இன்டர்நேஷனல் ஆட்டோமோட்டிவ் பார்ட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்
(உரிமை மாற்றம் செய்யும் நிறுவனம்)
உடன்
உசுயி சுசிரா இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட்
(உரிமை மாற்றம் பெறும் நிறுவனம்)
என்பவற்றின்
ஒருங்கிணைப்பு ஏற்பாடு திட்ட விவகாரத்தில்

1956 நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு,
G-16, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை - 600058-ல்
பதிவு அலுவலகத்தைக் கொண்டுள்ள
உசுயி சுசிரா இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட்

…விண்ணப்பதாரர் /
உரிமை மாற்றம் செய்யும் நிறுவனம்

**<u>உரிமை மாற்றம் பெறும் நிறுவனத்தின் காப்பு பெறாத கடனீந்தோர் கூட்டத்தை நடத்துவதற்கான அறிவிப்பு</u>**

உசுயி இன்டர்நேஷனல் ஆட்டோமோட்டிவ் பார்ட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (உரிமை மாற்றம் செய்யும் நிறுவனம்) மற்றும் உசுயி சுசிரா இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் (உரிமை மாற்றம் பெறும் நிறுவனம்) மற்றும் அவைகளின் அந்தந்த பங்குதாரர்கள் ("திட்டம்") ஆகியவற்றிற்கிடையே திட்டமிடப்பட்டுள்ள ஒருங்கிணைப்பு செயல்பாட்டை பரிசீலிக்கும் நோக்கத்திற்கும் மற்றும் பொருத்தமாக கருதுமிடத்து, திருத்தத்தோடு அல்லது திருத்தமின்றி அதற்கு ஒப்புதல் தரவும் உசுயி சுசிரா இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் (உரிமை மாற்றம் பெறும் நிறுவனம்)-ன் காப்பு பெறாத கடனீந்தோர்களின் கூட்டம் ஒன்றை நடத்துமாறு மாண்புமிகு தேசிய நிறுவனச்சட்ட தீர்ப்பாயத்தின் சென்னை கிளை 2017 ஏப்ரல் 28 தேதியிட்டு ஒரு ஆணையினை வழங்கியிருக்கிறது என இதன்படி **அறிவிப்பு** செய்யப்படுகிறது.

மேற்கூறப்பட்ட ஆணையின்படி மற்றும் அதில் அறிவுறுத்தப்பட்டபடி உரிமை மாற்றம் பெறும் நிறுவனத்தின் காப்பு பெறாத கடனீந்தோர்களின் ஒரு கூட்டமானது 2017 ஜூன் 9ம் தேதி வெள்ளிக்கிழமையன்று காலை 11:30 மணியளவில் G-16, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை - 600058 என்ற உரிமை மாற்றம் பெறும் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் நடைபெறும் என்று இதன்படி அறிவிப்பு தரப்படுகிறது.

மேற்கூறப்பட்டவாறு கூட்டத்தில் கலந்துகொள்ள தகுதி உரிமை கொண்ட உரிமை மாற்றம் பெறும் நிறுவனத்தின் காப்பு பெறாத எந்தவொரு கடனீந்தோர் செய்கின்ற விண்ணப்பத்திலிருந்து ஒரு நாளுக்குள் மேற்கூறப்பட்ட ஒருங்கிணைப்பு திட்டத்தின் மற்றும் பிரிவு 230-ன்கீழ் அறிக்கையின் நகல்களை G-16, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை - 600058 என்ற உரிமை மாற்றம் பெறும் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில், அல்லது எண். 24, தம்பைய்யா ரெட்டி சாலை, மேற்கு மாம்பலம், சென்னை 600 033 என்ற முகவரியில் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியான திரு. S. P. முரளிகிருஷ்ணன் என்பவரின் அலுவலகத்திலிருந்து கட்டணமின்றி பெற்றுக்கொள்ளலாம். கூட்டத்தில் கலந்துகொள்ளவும் மற்றும் வாக்களிக்கவும் தகுதியுரிமை கொண்டுள்ள நபர்கள் கூட்டத்திற்கு முன்பாக 48 மணிநேரங்களுக்கு குறையாமல், உரிமை மாற்றம் பெறும் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் அனைத்து நிகராளிகளையும் சமர்ப்பித்திருக்கும் பட்சத்தில், உரிமை பெற்ற நிகராளியின் வழியாக வாக்களிக்கலாம் அல்லது நேரடியாக கலந்துகொண்டு வாக்களிக்கலாம்.

உரிமை பெற்ற நிகராளிக்கான படிவங்களை நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட கூட்டத்தின் தலைவராக, உரிமை மாற்றம் பெறும் நிறுவனத்தின் இயக்குநரான திரு. சரவணன் எமரோஸ்-ஐ தீர்ப்பாயம் நியமனம் செய்திருக்கிறது. மேற்குறிப்பிடப்பட்ட நிறுவன இணைப்பானது, கூட்டத்தால் ஒப்புதல் வழங்கப்படுமானால், அதன்பிறகு தீர்ப்பாயத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டதாக இருக்கும்.

கையொப்பம்/-
சரவணன் எமரோஸ்
கூட்டத்திற்காக நியமிக்கப்பட்ட தலைவர்
தேதி 2017 மே 03
DIN: 07564435